**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 58** **நாள்: 28.04.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள், நடைபாதைகள் மற்றும் தெருக்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 406 உபயோகமற்ற மற்றும் பழுதடைந்த வாகனங்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இரண்டு, மூன்று மற்றும் நான்கு சக்கர வாகன உரிமையாளர்கள் உபயோகமற்ற, பழுதடைந்த வாகனங்களை சாலையோரங்கள், நடைபாதைகள் மற்றும் தெருக்கள் ஆகியவற்றில் நிறுத்தி வைத்துள்ளதை, வாகனங்களின் உரிமையாளர்கள் உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும் என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

அவ்வாறு அப்புறப்படுத்தப்படாத வாகனங்களை பெருநகர சென்னை மாநகராட்சியானது, பெருநகர சென்னை காவல்துறை உதவியுடன் தற்பொழுது அப்புறப்படுத்தி வருகிறது. 27.03.2018 முதல் 26.04.2018 வரை அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்களின் விவரங்கள் பின்வருமாறு: வடக்கு வட்டார அலுவலகத்தின் கீழ் வரும் 1 முதல் 5 வரையுள்ள மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் இருசக்கர வாகனங்கள் 299, ஆட்டோக்கள் 7, கார்கள் 4 என மொத்தம் 310 வாகனங்கள் அப்புறப்படுத்தப்பட்டு, இராயபுரம் மண்டலம், கோட்டம்–58, சூளை, அவதான பாப்பையா தெருவில் மலேரியா ஸ்டோர் அருகில் அமைந்துள்ள மாநகராட்சி இடத்திலும்,

மத்திய வட்டார அலுவலகத்தின் கீழ் வரும் 6 முதல் 10 வரையுள்ள மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் இருசக்கர வாகனங்கள் 20, ஆட்டோக்கள் 9, கார்கள் 18, வேன் மற்றும் டாடா ஏசி 5, ஜீப் 1 என மொத்தம் 53 வாகனங்கள் அப்புறப்படுத்தப்பட்டு, அண்ணாநகர் மண்டலம், கோட்டம்–107, மேயர் சத்திய மூர்த்தி சாலை, கெங்குரெட்டி சுரங்கப்பாதை அருகிலுள்ள மத்திய தார் கலவை நிலைய வளாகத்திலும்,

தெற்கு வட்டார அலுவலகத்தின் கீழ் வரும் 11 முதல் 15 வரையுள்ள மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் இருசக்கர வாகனங்கள் 18, ஆட்டோக்கள் 9, கார்கள் 14, வேன் மற்றும் டாடா ஏசி 2 என மொத்தம் 43 வாகனங்கள் அப்புறப்படுத்தப்பட்டு, பெருங்குடி மண்டலம், கோட்டம்–188, வேளச்சேரி–தாம்பரம் சாலையில் அமைந்துள்ள பள்ளிக்கரணை பழைய குப்பை கொட்டும் வளாகத்திலும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

மேலும், இதுபோன்று கேட்பாரற்று கிடக்கும் பழுதடைந்த வாகனங்களை அகற்றும் பணி காவல்துறை உதவியுடன் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். தற்போது அகற்றப்பட்டுள்ள 406 வாகனங்களில் 306 வாகனங்கள் உரிமை கோரப்படாத வாகனங்கள் என காவல்துறையினரால் ஒப்புதல் சான்று பெறப்பட்டுள்ளது. இந்த வாகனங்கள் அனைத்தும் ஏலம் விடப்பட்டு அரசு கணக்கில் நிதி செலுத்தப்படும். மீதமுள்ள வாகனங்கள் காவல்துறையிடமிருந்து ஒப்புதல் சான்று பெறப்பட்டவுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**